ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2023.01.31 |


# கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2023 சனவரியில் மேலும் தளர்வடைந்தது

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொநுவிசு, 2013=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2022 திசெம்பரின் 57.2 சதவீதத்திலிருந்து 2023 சனவரியில் 54.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முதன்மைப் பணவீக்கத்தில் இவ்வீழ்ச்சியானது, 2023 சனவரியில் இலங்கை மத்திய வங்கியினால் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்க வேகக்குறைவுப் பாதைக்கு இசைவாக பரந்தளவில் காணப்படுகின்றது.

| பணவீக்கம் | 2022 திசெம்பர் | 2023 சனவரி |
|---|---|---|
| சுட்டெண் பெறுமதி | 243.2 | 244.3 |
| மாதாந்த மாற்றம் (%) | 0.2 | 0.5 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 57.2 | 54.2 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 46.4 | 49.6 |

உணவுப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) 2022 திசெம்பரின் 64.4 சதவீதத்திலிருந்து 2023 சனவரியில் 60.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை, உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2022 திசெம்பரின் 53.4 சதவீதத்திலிருந்து 2023 சனவரியில் 51.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம், 2023 சனவரியில் 0.43 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டதுடன் இதற்கு, 0.23 சதவீதமாகவும் 0.20 சதவீதமாகவும் காணப்பட்ட முறையே உணவு மற்றும் உணவல்லா வகையிலுள்ள பொருட்களில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்கள் காரணமாக அமைந்தன. அதேவேளை, ஆண்டுச் சராசரிப் பணவீக்கம், 2022 திசெம்பரின் 46.4 சதவீதத்திலிருந்து 2023 சனவரியில் 49.6 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2022 திசெம்பரின் 47.7 சதவீதத்திலிருந்து 2023 சனவரியில் 45.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை, ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம், 2022 திசெம்பரின் 34.6 சதவீதத்திலிருந்து 2023 சனவரியில் 37.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.


**கொநுவி சுட்டெண்ணில் மாதாந்த சதவீத மாற்றத்திற்கான பங்களிப்பு**




முன்னோக்கி நோக்குகையில், இலங்கை மத்திய வங்கியின் அண்மைக்கால பேரண்டப் பொருளாதார எறிவுகளின் அடிப்படையில் பணவீக்கத்தின் வீழ்ச்சிப் போக்கானது சாதகமான புள்ளிவிபரத் தளத்தாக்கத்துடன் இணைந்து, இறுக்கமான நாணய மற்றும் இறைக்கொள்கை வழிமுறைகள், உள்நாட்டு வழங்கல் நிலைமைகளில் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடுகள் அத்துடன் எதிர்பார்க்கப்படும் உலகளாவிய சக்தி மற்றும் உணவு விலைகளின் தளர்வடைதலானது உள்நாட்டு விலைகளுக்கு ஊடுகடத்தப்படுதல் என்பன காரணமாக குறைவடைந்த கேள்வி நிலைமைகளினால் துணையளிக்கப்பட்டு 2023ஆம் ஆண்டு முழுவதும் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், உள்நாட்டு சக்தி விலைகளில் சாத்தியமான மேல்நோக்கிய சீராக்கங்கள், மற்றும் ஏதேனும் இணையப்பெற்ற இரண்டாம் சுற்றுத் தாக்கங்கள், உலகளாவிய சக்தி மற்றும் உணவு விலைகளின் கீழ்நோக்கிய திருத்தங்கள் உள்நாட்டு நுகர்வோருக்கு கடத்தப்படுவதில் தாமதங்கள் போன்றவற்றிலிருந்து தோன்றுகின்ற இப்பணவீக்க வேகக்குறைப்பு பாதையினை மேல்நோக்கிச் செலுத்தக்கூடிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. எதுஎவ்வாறிருப்பினும், பொதுமக்களின் குறைவடைந்த கொள்வனவு சக்தி போன்ற காரணிகள் பணவீக்க எறிவுகளின் கீழ்நோக்கிய போக்கிற்கு மேலும் வலுச்சேர்த்து பணவீக்க அழுத்தங்களை தளர்த்தக்கூடும்.

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்[2]**

**கொநுவிசு, 2013=100, காலாண்டு சராசரி, ஆண்டிற்கு ஆண்டு, சதவீதம்**





*மூலம்: இலங்கை மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்*

---

[1] கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (2013=100) கொழும்பு மாவட்டத்தின் நகர் பிரதேசங்களிலுள்ள வீட்டலகுகளால் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளிலுள்ள சராசரி மாற்றங்களை குறித்துக்காட்டுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

2 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் வெளியீட்டுடன் இணைந்து காலாண்டு அடிப்படையில் மத்திய வங்கி அதன் நடுத்தரகால பணவீக்க எதிர்வுகூறல்களை திருத்துகின்றது. இங்கு காண்பிக்கப்பட்ட எதிர்வுகூறல்கள் 2023 சனவரி எதிர்கூறல் சுற்றில் கிடைக்கப்பெறத்தக்க தரவுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்வுகள் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றது.

**துணை வகைப்படுத்தல் (ஆண்டிற்கு ஆண்டு மாற்றம்) அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம்**




**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவு (2013=100)**

| காலம் | | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | மாதம் | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | ஆண்டு | மாதம் | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் |
| 2022 | சனவரி | 158.4 | 154.1 | 2.4 | 1.9 | 14.2 | 9.9 | 6.9 | 5.0 |
| | பெப்புருவரி | 160.1 | 155.7 | 1.1 | 1.0 | 15.1 | 10.9 | 7.9 | 5.7 |
| | மாச்சு | 164.9 | 159.4 | 3.0 | 2.4 | 18.7 | 13.0 | 9.1 | 6.5 |
| | ஏப்பிறல் | 180.2 | 172.4 | 9.3 | 8.2 | 29.8 | 22.0 | 11.3 | 8.1 |
| | மே | 195.2 | 182.9 | 8.3 | 6.1 | 39.1 | 28.4 | 14.2 | 10.2 |
| | யூன் | 220.2 | 200.2 | 12.8 | 9.5 | 54.6 | 39.9 | 18.4 | 13.3 |
| | யூலை | 230.1 | 208.0 | 4.5 | 3.9 | 60.8 | 44.3 | 23.1 | 16.7 |
| | ஓகத்து | 235.8 | 212.0 | 2.5 | 1.9 | 64.3 | 46.6 | 28.0 | 20.3 |
| | செத்தெம்பர் | 244.7 | 219.3 | 3.8 | 3.4 | 69.8 | 50.2 | 33.4 | 24.1 |
| | ஒத்தோபர் | 243.8 | 221.4 | -0.4 | 1.0 | 66.0 | 49.7 | 38.3 | 27.8 |
| | நவெம்பர் | 242.6 | 223.2 | -0.5 | 0.8 | 61.0 | 49.4 | 42.6 | 31.4 |
| | திசெம்பர் | 243.2 | 223.4 | 0.2 | 0.1 | 57.2 | 47.7 | 46.4 | 34.6 |
| 2023 | சனவரி | 244.3 | 224.3 | 0.5 | 0.4 | 54.2 | 45.6 | 49.6 | 37.6 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்